முருகப்பெருமான் துணை

பக்திகலந்த தவமுயற்சி

**மகான் வால்மீகி அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

07.11.2021, ஞாயிற்றுக்கிழமை

1. யோகசித்தே அரங்கா போற்றி
உயர் ஞானம் தந்து அருளும்
யோகராஜனே தேசிகா போற்றி
உலகத்தில் உன் பெருமை கூறி
2. கூறியே துல்லிய ஆசிதனை
குறைவிலா பிலவ துலை திங்கள்
இருபானோர் திகதி கதிர்வாரம்
(பிலவ வருடம் ஐப்பசி மாதம் 21ம் நாள், 07.11.2021 ஞாயிற்றுக்கிழமை)
இயம்பிடுவேன் வால்மீகி உலகநலம் பெற
3. நலம்தரும் நல்ல ஞானம் தரும்
ஞானவழி அரங்கன் மார்க்கம்
வளம் தரும் மனபலம் தரும் வண்ணம்
வையகத்தில் வழிகாட்டலாக இருக்க
4. இருக்கவே ஓங்காரக் குடிலாம்
ஏழாம்படைவீட்டை நோக்கி
கருத்தாக உலகமக்கள் வந்து
கண்ணியமுடன் சரணாகதி கொண்டு
5. கொண்டுமே வணங்கி நின்று
குருவாக அரங்கனை ஏற்று
தொண்டனாகி நித்ய பூசையில்
தொடர்ந்து அரங்கா அரங்கா எனும் செபம்
6. செபதபம் மிகுதிபட செய்துவர
செயல்கள் அனைத்தும் அரங்கனுக்கு
அபயமென வேண்டி வர
அருளாசி தருகின்ற ஞான தீட்சை
7. தீட்சைதனை வாழும் ஞானி
தேசிகன்பால் ஏற்று விடவே
தீட்சை பலனாய் செயல் சித்தி
திருவருளாக சகலகாரிய வெற்றி
8. வெற்றி கண்டு வினை வென்று
விரும்பிட எண்ணம் வழியே
ஆற்றல்பட சகல செயலும்
அரங்கனால் வரமாக்கப்பட்டு இனிதே

9. இனிதே மிகுந்த மாற்றமும்
எல்லையிலா மகிழ்வும் பூர்த்தியும்
துணிவுபட ஆறுதலும் அமைதியும்
தேசிகன் அருளால் வந்தடையும்

10. அடையவே மானுட குலத்தை
அழிக்கும் தீவினை மாயைகள்
தடையற அரங்கன் வழிவர
தவிடுபொடியாகி அகன்றுமேவி

11. மேவியே துன்பம் வாராதபடி
மேலான பாதுகாப்பாக மாறி
அவனியில் வாழும் காலமே
அகிலத்தார்க்கு ஆனந்த கதிகிட்டும்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–

**களிம்பறுத் தான்எங்கள் கண்ணுதல் நந்தி**
**களிம்பறுத் தான்அருட் கண்விழிப் பித்துக்**
**களிம்பணு காத கதிரொளி காட்டிப்**
**பளிங்கிற் பவளம் பதித்தான் பதியே.**
**– திருமந்திரம் – உபதேசம் – கவி எண் 114.**

**பல்லாயிர அணுக்களை பற்றிய களிம்பினை**
**நல்லதோர் வேதியலால் நானறிந்து கொண்டேனே!**
**– ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகள்**

**திருக்குறள் 3 வது அதிகாரம் "நீத்தார் பெருமை"**

உடம்பாகிய சந்திரகலையையும் உயிராகிய சூரியகலையையும் சேர்த்து ரேசித்து பூரித்து புருவமத்தியில் ஸ்தம்பித்தால் அந்த கணப் பொழுதிலிருந்து உடலில் மென்மையான கனல் தோன்றி உடலில் உள்ள கோடிக்கணக்கான அணுக்களில் பற்றி உள்ள களிம்பினை மென்மையாக வேதியியல் செய்து நீக்கிவிடுவார்கள். இதை முருகப்பெருமானின் ஆசியோடுதான் செய்யமுடியும். முருகப்பெருமானின்ஆசி இருந்தால் மட்டுமே உடலில் உள்ள கோடிக்கணக்கான அணுக்களில் பற்றியுள்ள களிம்பினை மெல்லிய வேதியியல் செய்து நீக்கமுடியும். உடம்பை மென்மையான கனல் கொண்டு வேதியியல் செய்து வெற்றி கண்டவர்கள்தான் "நீத்தார்". வேதியியல் செய்து வெற்றி பெறுவதுதான் "நீத்தல்" ஆகும். அவர்கள் பெருமைகளை கவிகளாக மகான் திருவள்ளுவர் "நீத்தார் பெருமை" என்ற அதிகாரத்தில் பாடியுள்ளார்கள் 100 கிராம் உள்ள நெருப்பு துண்டை நீர் விட்டு அவித்தால் அது கரியாக மாறும். அதை தண்ணீர் விடாமல் விட்டால் அந்த நெருப்பு துண்டு நீர்த்து சாம்பலாகும்.

உடம்பில் மெய்யும் பொய்யும் கலந்துள்ளது. மென்மை கனல் கொண்டு பொய்மை நீக்குவதே "நீத்தார்" ஆகும்.

**பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ்வார். – கடவுள் வாழ்த்து 6.**

மேற்கண்ட கருத்துகள் துறையூர் அவல்பட்டரை சந்து சின்னசாமி சாஸ்திரிகள் மனமுவந்து சொன்னதாகும்.